1994 நவம்பர் 9]

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியை வணங்கி, தமிழ்நாடு சட்டப்பேரவையினுடைய 1995ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் இருபத்து ஏழாவது மற்றும் இருபத்தெட்டாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திருமதி ஜீனத் சர்புதீன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1994–95ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்தொன்பதாவது, ஐம்பதாவது மற்றும் ஐம்பத்தொன்றாவது (பத்தாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள், (அறிமுகம் செய்தல்). 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.